ஆவணி, 2019

# இயற்கைவழி

இயற்கைவழி எம்வழி!

## மண்வளம்

### இயற்கை வேளாண் விஞ்ஞானி பாமயன்

நிலம் என்பது இந்தப் பூவுலகின் மேற்பரப்பைக் குறிப்பதாகும். நிலம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. கடும் பாறை முதல் வளமான வண்டல் நிலம் வரை காணப்படுகிறது. மலை, பள்ளத்தாக்கு என்று பல்வேறு வடிவங்களில் நிலம் காணப்படுகிறது. உயிரினங்களின் தொட்டில் இந்த நிலம் என்னும் தாய்தான். நிலத்தின் மேலடுக்கு மண் எனப்படும். இந்த பூவுலகத்தை ஓர் ஆப்பிள் பழம்போல கற்பனை செய்துகொண்டால் அதன் மேல்தோல் அளவே மண் ஆகும். இதில்தான் உலகில் உள்ள பெரும்பான்மையான உயிரினங்கள் வாழ்கின்றன.

மண்ணின் ஆழம், தன்மை ஆகியவை இடத்திற்கு இடம் மாறுகின்றது. ஒரு செமீ(*cm*) நல்ல மேல்மண் உருவாக பல கோடி ஆண்டுகள் தேவைப்படுகின்றன என்கின்றனர் ஆய்வாளர்கள். இதில்தான் உயிரினங்கள் வாழ்வதற்கான ஊட்டங்கள் அனைத்தும் உள்ளன. வளமான மேல்மண் பல்வேறு வகையான செயல்பாடுகளால் வளமிழந்து போகின்றது. நீர் வடிந்தோடுவதில் நில அமைப்பு இன்றியமையாததாகும். நிலம் என்பது பாறை முதல் பள்ளத்தாக்கு வரை பல்வேறு வகையில் அமைந்துள்ளது. உயரம், சரிவு, ஆழம் என்று ஒவ்வொரு அமைப்பும் நீரின் ஓட்டத்தைத் தீர்மானிக்கின்றன. நிலத்தினுள் ஊடுருவும் நீரின் அளவைக் கொண்டு நிலத்தைப் பிரிக்கின்றனர்.

## இந்த மடலில்...


1. மண்வளம் — இயற்கை வேளாண் விஞ்ஞானி பாமயன்
2. தரிசெல்லாம் பனை நடுவோம் — மாவடியூர் சிவதாஸ்
3. சங்கதி கூறும் சக்கடத்தார்
4. சங்கரின் கருத்துச் சித்திரம் — மண் மீட்போம்
5. சீமைக்கருவேலம் அழிக்கப்பட வேண்டிய அரக்கன் — பசுமைச் சுவடுகள்
6. யாழில் சிறப்பாக இடம்பெற்ற பண்ணைப் பயில்களம் — செ. கிரிசாந்
7. அல்லை விவசாயி ஆரோக்கிய உணவகம் யாழில் திறப்பு — செ. கிரிசாந்


**இயற்கைவழி இயக்கத்தின் களப்பயணங்கள், உரையாடல்கள், விழிப்புணர்வூட்டல்கள் எனச் சகல செயற்பாடுகளையும் மக்களிடையே எடுத்துச் சென்று மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான ஒரு கருவியே இயற்கைவழி இயக்கத்தின் வெளியீடாக வரும் இச் செய்தி மடலாகும். இதனை எங்கள் மக்களிடத்தே குறிப்பாக எம் இளம் சமுகத்தினரிடையே எடுத்துச் செல்லவேண்டியது உங்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.**



**தொடர்பு : இயற்கைவழி செய்திமடல், தமிழ் ஊடகத் திரட்டு, லக்சுமி கட்டிடம், GPS வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். | *0094 021 226 2121* |**
***editoromne@gmail.com | www.omne.bio***

**மண்ணின் தோற்றம்**

*கெட்டியாக இருந்த பாறையானது பூதியல், வேதியல், உயிரியல் மாற்றங்களால் சிதைவுற்று துகள்களாக மாறுகின்றன. அதை மணல் என்று கூறுகிறோம். அந்த மணலானது மேலும் சிதைவுற்று சிறியதாகி உயிர்மப் பொருள்களுடன் இணைந்து மண்ணாக மாறுகின்றது. மண்ணை உருவாக்குவதில் காற்று, மழை, வெயில் போன்ற காரணிகளும், செடியினங்கள், விலங்கினங்களும் பங்காற்றுகின்றன.*

*இந்த மணலில் மட்கு (humus) சேர்ந்து மண் உருவாகிறது. வளமான மண்ணில் மட்கிய சத்துக்கள் அதிகம் இருக்கும். அந்த மட்கின் அளவைப் பொறுத்து வளம் அமைகிறது. அதிக மட்கு இருந்தால் அதிக வளம், குறைவான மட்கு இருந்தால் குறைவான வளம் இருக்கும்.*

## மண்ணின் வகைகள்




*0.05 மிமீ-க்கும் 2 மிமீ-க்கும் இடைப்பட்ட அளவுள்ள துகள்களை மணல் என்றும், 0.002 மிமீ-க்கும் 0.05 மிமீ-க்கும் இடைப்பட்ட நிலையில் உள்ள துகள்களை வண்டல் என்றும், 0.002 மிமீ-க்குக் குறைவான அளவுள்ள துகள்களை களிமண் என்றும் பிரிக்கின்றனர்.*

*மண்ணின் தன்மையை அதில் கலந்துள்ள வண்டலை வைத்தும், மணலை வைத்தும் களியை வைத்தும் தீர்மானிக்கின்றனர். தமிழகத்தைப் பொறுத்த அளவில் செம்மண், கரிசல் மண், வண்டல் மண், சரளை மண் என்று பிரிக்கின்றனர்.*

***சரளை நிலம்***

*இந்த நிலம் அதிகமாக நீர் ஊடுருவும் திறன் கொண்டது. அதாவது இதில் பரப்பளவு நீரோட்டம் மிகக் குறைவாக இருக்கும். இவ்வகை நிலத்தில் மணல், சரளைக் கற்கள் போன்றவை அதிகம் காணப்படும். இந்த நிலத்தில் ஒரு மணி நேரத்தில் 25 மில்லி மீட்டருக்கும் அதிகமாக நீர் உள்ளிறங்கும் தன்மை கொண்டது என்று ஆய்வாளர்கள் நிறுவுகின்றனர்.*

***மணல் நிலம்***

*முதலில் கூறிய அளவைவிட சற்றுக் குறைவாகவே நீர் இதனுள் இறங்கும். ஆனால் மழை நீரானது சற்று மெல்ல இறங்கும். கனமழை பெய்தால் மட்டுமே இவ்வகை நிலத்தில் நீரோட்டம் ஏற்படும். பாசனம் அடிக்கடி செய்ய வேண்டும். தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் இவ்வகை நிலம் அதிகமாக உள்ளது. வண்டல் மண் சில பகுதிகளில் காணப்படுகிறது. ஆற்றுப் படுகைகள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. மணிக்கு 12.5 முதல் 25 மில்லி மீட்டர் அளவில் நீர் நிலத்தினுள் இறங்கும் வகையில் இவ்வகை நிலம் அமைந்துள்ளது.*

***செம்புரை நிலம் அல்லது மிதநிலம்***

*இந்த நிலத்தில் மேற்பரப்பு நீரோட்டம் அதிகமாக இருக்கும். மெல்ல மெல்லவே நீர் நிலத்தினுள் இறங்கும். மணல் குறைவாக இருக்கும். செம்மண், மணலற்ற வண்டல்மண் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. இந்த நிலத்தில் நீரானது மணிக்கு 2.5 முதல் 12.5 மி.மீ. என்ற அளவில் இருக்கும். இந்த நிலத்தில் நல்ல வடிகால் வசதி இருக்கும்.*

***களிமண் நிலம்***

*இதில் மேற்பரப்பு நீரோட்டம் மிக அதிகமாக இருக்கும். தண்ணீர் தேங்குவதும் அதிகம் இருக்கும். நிலத்தடியில் கடும்பாறைகள் இருக்கும். இந்நிலத்தில் மட்குப் பொருள்கள் மிகக் குறைவாக இருக்கும். தொடர்ந்து மண் அரிமானம் நடந்திருக்கும் பகுதிகள் இவ்வாறு இருக்கின்றன. இந்த நிலத்தில் நீர் உள்ளிறங்கும் அளவு மணிக்கு 2.5 மி.மீ.க்கும் குறைவாக இருக்கும்.*

***மண்ணை அதன் நீர்வடி திறன் (Water Holding Capacity) கொண்டு பின்வருமாறு பிரிக்கின்றனர்.***

- ***மிகைதிற நீர்வடி மண்:*** *இந்த மண்வகையில் நீர் பொதுவாக முற்றிலும் வடிந்துவிடும் என்றாலும் மெல்ல மெல்லவே வடியும். மண்ணின் ஈரப்பதம் நடுத்தரமாக இருக்கும். நிலத்திற்குள் ஈரப்பதம் குறைவாகவே இருக்கும்.*

- ***மிதத்திற நீர்வடி மண்:*** *இங்கு நீர் நடுத்தரமாக வடியும். ஈரப்பதம் ஓரளவு காக்கப்படும். நீண்ட நேரம் ஈரப்பதம் இருக்கும்.*

- ***குறைதிற நீர்வடி மண்:*** *இங்கு நீர் அதிக நேரம் தங்கி மண்ணுள் செல்லும். இதனால் மண்ணின் ஆழத்தில் ஈரப்பதம் இருக்கும். செடிகளுக்கு குறிப்பாக மரப்பயிர்களுக்கு ஈரம் கிடைக்கும்.*

***நிலத்தின் சரிவை வைத்து அதைச் சாகுபடிக்கு ஏற்றதா? இல்லையா? என்று பிரிக்கின்றனர்.***

*1) சரிவு விழுக்காடு 0 — 1 என்ற அளவில் இருந்தால் அந்த நிலம் சாகுபடிக்கு மிகப்பொறுத்தமானது. எல்லாவகையான பயிர்களையும் இதில் செய்ய முடியும் பல்வேறு வகையாக சாகுபடி நுட்பங்களைக் கையாண்டு அதிக விளைச்சலை எடுக்க முடியும்.*

*2) சரிவு விழுக்காடு 1 — 3 என்ற அளவில் இருந்தால் எல்லாப் பயிர்களையும் செய்ய முடியும் ஆனால் மண் அரிமானத்தைத் தடுக்கும் தடுப்புப் பயிர்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். சம மட்ட வரப்புகள் அமைத்துக் கொள்ள வேண்டும்.*

*3) சரிவு விழுக்காடு 3 — 5 என்ற அளவில் இருந்தாலும் எல்லா வகைப் பயிர்களும் செய்ய முடியும். சமமட்ட வரப்புகள், மண் அரிப்புத் தடுப்புப் புறக்கள் மற்றும் சமமட்டத் தடுப்புப் படியமைப்புகள் இதற்குத் தேவை.*

*4) சரிவு விழுக்காடு 5 — 8 என்ற அளவில் இருந்தால் குறிப்பிட்ட பயிர்களை மட்டும் செய்ய முடியும். அடிக்கடி உழவு செய்தல் தவிர்க்கப்பட வேண்டும். மூடாக்கு உத்திகள் கடைப்பிடிக்க வேண்டும். மண்ணை மழைநீர் தாக்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். மட்ட வரப்புகள், மண் பிடிமானப் பயிர்கள் போன்றவற்றை அமைக்க வேண்டும்.*

*5) சரிவு விழுக்காடு 8 — 12 என்ற அளவில் இருந்தால் இதைத் தீவிர சாகுபடிக்கு உட்படுத்த இயலாது. அதிக அளவில் புற்களை வளர்த்து மேய்ச்சல் தரையாக வைத்துக் கொள்ளலாம். குறுகிய கால மரங்களை வளர்க்கலாம். வேளாண் காடுகளை உருவாக்கலாம்.*

*6) சரிவு விழுக்காடு 12 — 18 என்ற அளவில் இருந்தால் பயிர் சாகுபடி செய்ய இயலாது. நீண்ட கால மரங்கள் வளர்க்கலாம். கால்டைகள் வளர்க்கலாம். இந்த நிலத்தை புல் மற்றும் இதர பயிர்களைக் கொண்டு மூடி வைக்க வேண்டும்.*

*7) சரிவு விழுக்காடு 18 — 25 என்ற அளவில் இருந்தால் மரப் பயிர்களை அதிகம் வளர்க்க வேண்டும். குறிப்பாக நீண்ட காலத்திற்கு பலன் தரும் மா, பலா போன்ற பயிர்களை வளர்க்க வேண்டும். இங்கு மரம் வெட்டுதல் கூடாது. மண்ணை புல் போன்ற தாவரங்கள் கொண்டு மூடியே வைத்திருக்க வேண்டும்.*

*8) சரிவு விழுக்காடு 25க்கு மேல் இருந்தால் இங்கு அடர் காடுகளை அமைக்க வேண்டும். மரம் வெட்டுதல் கூடாது. காடுபடு பொருட்களை மட்டுமே எடுக்க வேண்டும்.*

*(கட்டுரை அடுத்த செய்திமடலில் தொடரும்.)*

*இயற்கைவழி இயக்கத்தின் இவ் விழிப்புணர்வுச் செய்திமடலானது மாதாந்தம் தொடர்ச்சியாக வெளிவர உள்ளது. சூழலியல் ஆர்வலர்கள், இயற்கைவழி வாழ்வியலில் ஆர்வமுடையோரிடமிருந்து தரமான ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம். குறிப்பாகப் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களுக்கெனத் தனியான பகுதியொன்றினை ஒதுக்க உத்தேசித்துள்ளதால் இளையோரிடமிருந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். ஆக்கங்களையும், விமர்சனங்களையும் எங்கள் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கலாம்.* *editoromne@gmail.com* | ***0094 021 226 2121*** | ***0094 77 809 6226***

## தரிசெல்லாம் பனை நடுவோம்

மாவடியூர் சிவதாஸ்

இளையோரின் இனிய பணி
பனை நடுகை நானிலத்தில்
நற்செய்தி நற்பணியும் இங்கெமக்கு
பணிசிறக்க போற்றுகிறோம் இறைவா

பனை நடுவோம் பயன் பெறுவோம்
நம் சொத்து எம்மண்ணில்
ஏது வளம் பனையில் இல்லை
கற்பகமாய் இறை தந்த தருவாகும்


தரிசெல்லாம் பனை நடுவோம்
தார்மீக பொறுப்பென்போம்
இளையர்களின் பணிக்கு உதவிடவே
உறுதியுடன் உழைத்திடுவோம்
உன்னத பணி ஓங்கிடவே!

## சங்கதி கூறும் சக்கடத்தார்

வணக்கம், போனமுறை நாசினி இல்லாமல் நானிலம் காப்போம் என்று எழுதினன். அதுக்கு பலபேர் "மலடாகிப் போன மண்ணை எவ்வாறு வளமாக்கலாம்?" எண்டு கேள்வி எழுப்பிச்சினம்.

சொன்னா நம்பமாட்டியள், இருநூறு நாளில மண்ணை வளமாக்கலாம். நான்கு வகை தானியத்தில நான்கு கிலோவும், நான்குவகை பசுந்தாட் பயிரில் நான்கு கிலோவும், நான்கு வகை அவரைத் தாவரத்தில் நான்கு கிலோவும், நான்கு வகை எண்ணெய் தாவரத்தில் நான்கு கிலோவும், நான்கு வாசனைப் பயிரில் இரண்டு கிலோவும் விதைகளை எடுத்து கலந்து ஒரு ஏக்கருக்கு விதைச்சு அறுபதாவது நாளில மடக்கி உழுதா இருநூறு நாளில மண் நல்ல வளமாகிடும் பாருங்கோ. செய்யுங்கோ, பலனைப் பெறுங்கோ.

## சங்கரின் கருத்துச் சித்திரம்




மலடாகிப் போன எம் தாய்மண்ணை வளமாக மாற்றிடுவோம்.—நலமாக
எளிதான சேதனங்கள் முறையாக சேர்த்து மாண்புள்ள எம் மண்ணை மாற்றிடுவோம்.

# சீமைக்கருவேலம் அழிக்கப்பட வேண்டிய அரக்கன்

*பசுமைச் சுவடுகள் 0762073333 / 0776385805*

*சீமைக்கருவேல மரங்கள் (Prosopis juliflora) அமெரிக்கா, மெக்சிக்கோ போன்ற நாடுகளிலிருந்து ஆபிரிக்க மற்றும் இலங்கை, இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டன. இவை அறிமுகம் செய்யப்படும் போது வேலிக்காகப் பயன்படும் (வேலிக்காத்தான்), புகையிரதங்களுக்கான எரிபொருளாகவும், மக்களின் விறகுத் தேவையைப் பூர்த்திசெய்யும் மற்றும் வறண்ட நிலத்திலும் வளரக்கூடியவை என்பதால் கால்நடைகளுக்கு உணவாகவும், பாதுகாப்பாகவும் அமையும் போன்ற காரணங்கள் கூறப்பட்டதனால் அரசாங்கத்தாலும், மக்களாலும் அதிகளவில் நாட்டி வளர்க்கப்பட்டன. ஆனால் உண்மைநிலை வேறு.*



*நாம் அனைவரும் எமது நாளாந்தப் பயணத்தின் போது ஏதோவொரு சீமைக்கருவேலமரத்தை கடந்தே செல்கிறோம். இவை சார்ந்து நம் புரிதல் தான் என்ன? தீவகப்பகுதிகளில் பெரும் காடுகளாகவும், வடமராட்சியில் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதி, மண்டான் வீதி, வல்லைவெளியை சுற்றியுள்ள அச்சுவேலி, தொண்டைமானாறுப் பிரதேசங்களில் பெருமளவிலும் மற்றும் யாழ்ப்பாணத்தின் புறநகர்ப்பகுதிகளின் அனைத்து வீதியோரங்களிலும் சிறிய, பெரிய அளவில் காணப்படுகின்றன. இவை உண்மையில் மிகவும் வீரியமான தாவரங்கள் மோசமான காலநிலை மற்றும் தட்ப, வெப்ப சூழலிலும் தம்மைத் தக்கவைத்துக்கொள்ளும். சுதேசமரங்களுடன் போட்டிபோட்டு சுதேசமரங்களை பிரதியீடு செய்யும். இதனால் நம் நாட்டின் சுதேச மரங்கள் கணிசமான அளவில் குறைந்து செல்லும். இவை தம் நிலைத்திருப்பிற்காக நிலத்தில் 60 அடிக்கும் ஆழமாகச்சென்று நீரை உறிஞ்சும், இதன் இலைகள் காற்றிலுள்ள ஈரப்பதத்தை அதிகளவில் உறிஞ்சும், இவ்வாறு சூழலில் நீரின் அளவைக் குறைத்து வறட்சியை ஏற்படுத்தும், மண்ணை வளமிழக்கச் செய்யும், விவசாயத்தைப் பாதிக்கும், உற்பத்தியைக் குறைக்கும்.*

*இவற்றை எவ்வாறு வினைத்திறனாக அழிக்கப்போகிறோம்? இவற்றை அழிப்பதற்கு முக்கியதேவை மக்களிடம் இவை பற்றிய விழிப்புணர்வும், தொடர்ச்சியான களச்செயற்பாடுகளுமே. இவற்றை வேரோடு புடுங்கி எரித்து அழிக்க வேண்டும். ஏனெனில் இதன் விதைகள் 7 வருடங்களுக்கு மேலாகவும் உயிர்ப்புடன் இருக்கக்கூடியவை. எரித்து அழிக்காவிட்டால் மீண்டும் மீண்டும் உருவாகும். இவற்றை அழித்து அவ்விடங்களில் நம் நாட்டின் சுதேச மரங்களான புங்கை, வாகை, வேம்பு, புளி போன்ற மரங்களை நாட்டி வளர்ப்பதன் மூலம் இவை மீளப்பெருகுவதைத் தடுக்கவும், மனிதர்கள், விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிர்களுக்கும் உகந்த சூழலை மீள்கட்டுமானம் செய்யவும் முடியும்.*

# யாழில் சிறப்பாக இடம்பெற்ற பண்ணைப் பயில்களம்

## இயற்கைவழிச் செயற்பாட்டாளர். செ. கிரிசாந்

இயற்கைவழி தாரா வளர்ப்பு தொடர்பான அனுபவப்பகிர்வும் கலந்துரையாடலும் 17/08/2019 அன்று சனிக்கிழமை கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள ஸ்ராலினியின் சீர் வளர் பண்ணையில் மாலை மூன்று மணிக்கு ஆரம்பமாகி ஐந்து மணிவரை சிறப்பாக இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் தாரா வளர்ப்பின் தனித்துவமான அடையாளமாக விளங்கும் ஸ்ராலினி தலைமையில் மேற்படி நிகழ்வு ஆரம்பமானது. சுமார் முப்பது இயற்கைவழி ஆர்வலர்கள் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வில் ருகுணு பல்கலை மாணவன். அனோஜன் அவர்களின் தாரா வளர்ப்பு பற்றிய விரிதரவுப் படத்துடனான விளக்கவுரை சிறப்பானதாக இருந்தது. அவர் தாரா வளர்ப்பின் அனுகூலங்கள், உணவூட்டல், விற்பனை வாய்ப்புக்கள் உட்பட பல விடயங்களை உதாரணங்களுடன் விளங்கப்படுத்தினார். நிகழ்வுக்கு வந்திருந்தவர்களுக்கு பனங்காய் பணியாரமும் நெல்லிப் பானமும் பரிமாறப்பட்டது. இறுதியாக தாரா பண்ணையைச் சுற்றிப் பார்வையிடலுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

சீர் வளர் பண்ணையானது தனியே தாரா வளர்ப்புடன் மாத்திரம் நின்றுவிடாமல் நல்லின ஆடுவளர்ப்பினையும் மேற்கொள்கின்றது. மேலும் இயற்கைவழி விவசாயத்துக்கு அவசியமான இடுபொருட்களான மண்புழு உரம், கூட்டுப்பசளை, உயிர்கரி உரம், உயிர்வாயுத் தொட்டி உரம் போன்றவற்றையும் உற்பத்தி செய்து விநியோகிக்கின்றார்கள். இயற்கைவழி வேளாண்மைக்கு அவசியமான ஊட்டக் கரைசல்களையும் பூச்சிவிரட்டிக் கரைசல்களையும் கூட இங்கு பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு பண்ணையின் மேலாளர் இ. ஸ்ராலினி (0779866409) அவர்களைத் தொடர்புகொள்ளுங்கள்.



*அல்லை விவசாயி ஆரோக்கிய உணவகத் திறப்புவிழாவின் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு.நா. வேதநாயகன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.*

# அல்லை விவசாயி ஆரோக்கிய உணவகம் யாழில் திறப்பு

## இயற்கைவழிச் செயற்பாட்டாளர். செ. கிரிசாந்

*அல்லை விவசாயி கிரிசனின் **இயற்கை விவசாய விற்பனை நிலையம் மற்றும் ஆரோக்கிய உணவகம்** 12.08.2019 மதியம் 12.30 மணியளவில் இலக்கம் - 384 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. முன்னதாக விருந்தினர்களின் மங்கள விளக்கேற்றலை தொடர்ந்து யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள் நாடா வெட்டி விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார். இரசாயனமற்ற மரக்கறிகள், கீரை வகைகள் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் ஒருங்கிணைந்த விற்பனை நிலையமாக இது உருவெடுத்துள்ளது. யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியை சேர்ந்த மகேஸ்வரநாதன் கிரிசன் (அலைபேசி 077 621 9086) என்கிற தனி இளைஞரின் உழைப்பால் இந்த இயற்கை விற்பனை நிலையம் சிறப்பாக உருவாகியுள்ளது.*

*கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மணிக்கூட்டு கோபுர வீதியில் பெருமாள் கோவிலுக்கு அருகில் சிறிய நிலையமாக இயங்கிவந்த அல்லைவிவசாயி இயற்கை விவசாய விற்பனை நிலையம் விரிவுபடுத்தப்பட்டு புதிய முகவரியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இயற்கையில் விளைந்த ஆரோக்கியமான உணவுகளை சமைத்து வழங்கும் ஆரோக்கிய உணவகமாக மிக விரைவில் செயற்படவுள்ளது. நிகழ்வில் பங்கேற்று யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கருத்து தெரிவிக்கையில், இரண்டு வருடத்துக்கு முதலும் பெருமாள் கோவிலடியில் அவரது முதல் விற்பனை நிலையத்தை நானே தொடக்கி வைத்தேன். இயற்கை முறைக்கு மாற வேண்டும் என சொல்வோர் இன்று அதிகமாக உள்ளனர். ஆனால் செயற்படுவோர் கிரிசனைப் போல் வெகுசிலர் தான் உள்ளனர். உண்மையில் இயற்கையில் விளைந்ததை உறுதிப்படுத்தி வாங்கும் நம்பிக்கையான இயற்கை விவசாயிகள் தான் இன்று தேவை. அதில் ஒரு இளைஞராக கிரிசன் ஆர்வமுடன் செயற்படுவது மகிழ்ச்சியளிக்கிறது. கிரிசனின் அப்பாவும் முதலில் இரசாயன விவசாயம் செய்திருக்கிறார். பின்னர் கிரிசன் தான் அப்பாவையும் மாற்றி இயற்கை விவசாயத்துக்கு கொண்டு வந்ததாக நான் கேள்விப்பட்டேன். இப்படியான மாற்றங்கள் தான் இன்று தேவையாகவுள்ளன. அவருக்கு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் என்றார்.*

*அல்லை விவசாயி கிரிசன் கருத்து தெரிவிக்கையில், ஐம்பதுக்கும் மேற்பட்ட விழிப்புணர்வுக் கண்காட்சிகளை இரண்டாண்டுகளில் நடத்தியிருக்கிறேன். இயற்கை முறையில் வீட்டுத்தோட்டங்களை அமைப்பதன் மூலமும் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கலாம். எனது விற்பனை நிலையத்தில் இயற்கையில் விளைந்த மரக்கறிகள், உள்ளூர் உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நான் என்றுமே உதவிக்கரமாக இருப்பேன் என்று கூறினார். இறுதியாக இஞ்சி கலந்த கற்றாழை சாறும், சூடான இலைக்கஞ்சியும் பரிமாறப்பட்டன. யாழ்ப்பாணத்தின் இயற்கைவழி விவசாய முயற்சிகளில் முன்னோடி இளைஞர்களில் ஒருவராக கிரிசன் விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.*

**இது இயற்கைவழி இயக்கத்தின் விழிப்புணர்வுக்கான மாதாந்தச் செய்திமடலாகும்.**